



# வெற்றி நமதே



டாக்டர் மு.கருணாநிதி



# வெற்றி நமதே

தமிழக முதல்வர்

## தமிழரசு

1—1—1972 இதழின்

இலவச இணைப்பு

கோட்டாகுடி பெரியநாயக்கர்
ஸ்ரீவ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

# பதிப்புரை

இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்தது. போர்த்தீ மூண்டது. ஏறத்தாழ மூன்று கிழமைகள் அமெரிக்க நாட்டில் சுற்றுப் பயணம் செய்து தாய்நாடு திரும்பும் தமிழக முதல்வருக்கு இங்கு—தமிழகத்தலைநகரில் வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப் பட்ட நேரத்தில், ' எனக்கு வரவேற்பு வேண்டாம் அந்த வரவேற்புக் கூட்டத்தையே பாகிஸ்தானின் வெறித்தாக்குதலைக் கண்டிக்கவும் நாம் உறுதி மொழி எடுப்பதற்குமான கூட்டமாக நடத்துங்கள் ' என்று விருப்பம் தெரிவித்தார்கள். அவ் விருப்பத்திற் கிணங்கக் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அந்தக் கண்டனக் கூட்டத்தில்,

'' இனி நம்மிடையே எத்தகைய வேறுபாடும் இல்லாமல் நாமனைவரும் இந்தியாவின் கட்சி ' என்ற அளவில் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதைப் பகைவர்க்கு உணர்த்துவோம்—இந்தியா வெற்றி பெற்றது—தன் எதிரிகளைப் புறங்காட்டி ஓடச் செய்தது—இந்தியா இனி வேறு யாராலும் வெல்ல முடியாத நிலையைப் பெற்றது என்ற அந்தக் கட்டம் தோன்றுகிற வரை நமக்குள் தாக்கிக் கொள்வதை ஒத்திவைத்து ஒன்றுபடுவோம்! வாருங்கள், வாருங்கள்! '' என்று அனைத்துக் கட்சியினருக்கும் அன்பழைப்பு விடுத்தார்கள்.

அந்த அன்பழைப்பைத் தொடர்ந்து 1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 6-ஆம் நாளில் தமிழ் நாடு சட்டப் பேரவையிலும், மேலவையிலும் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மானத்தை முன்வைத்துப் பல்வேறு அரிய கருத்துக்களை வெளியிட்டார்கள். அப்போது, பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட இழப்பைக் குறித்துப் பேசுகையில்,

''இவை யாவும் இழப்பின் ஆரம்பம்தான்—இழப்பின் முடிவு எதுவாக இருக்குமோ ? ஒருவேளை பாகிஸ்தானாகவே இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை '' என்று தெரிவித்தார்கள். மேலும், பேசுகையில்,

'' யாகியாகான் சொல்லியிருக்கிறார், 'இதுதான் என்னுடைய கடைசி யுத்தம் ' என்று. அவருடைய முடிவை—சாதகத்தை இவ்வளவு முன்கூட்டியே

தெரிவித்திருப்பதற்கு நாமெல்லாம் மகிழ்ச்சியடைகின்றோம் ' என்றும்,

'' இன்றைக்குப் பங்களா தேஷ் இந்திய அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான செய்தி வந்திருக்கிறது. இன்னும் இரு வார காலத்திற்குள் பங்களா தேஷ் முழுவதும் பாகிஸ்தான் கையிலிருந்து விடுவிக்கப்பட்டு, விடுதலை வீரர்களிடம் ஒப்படைக்கப்படுகிற செய்தி நிச்சயமாக வர இருக்கிறது என்பதனை நாமெல்லாம் எதிர்பார்க்கலாம்.

''பங்களா தேஷ் புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடியவண்ணம் பறக்கப் போகிறது!

'' இன்னும் 10 அல்லது 15 நாட்களில் கூடப் போர் முடிந்து விடக் கூடும்.''

என்பன போன்ற பல்வேறு கணிப்புகளைத் தெரிவித்தார்கள். அந்தக் கணிப்பின்படி, யாகியா கானுக்கு இதுவே கடைசிப் போராகி, பங்களா தேஷ் முழுவதும் விடுவிக்கப்பட்டு, விடுதலை வீரர்களிடம் ஒப்படைக்கப்படும் புதிய வங்கம்—சுதந்திர வங்கம் உதயமாகி விட்டது ! பங்களா தேஷ் புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடிய வண்ணம் பட்டொளி வீசிப் பறக்கிறது ! போரும் முடிந்து விட்டது !

' வெற்றி நமதே ! எதிரிகள் வீழ்வது உறுதி ' என்று முதல்வர் அவர்கள் வானொலியில் முழக்கினார்கள். இன்று நமது வெற்றியை உலக நாடுகள் பாராட்டுகின்றன.

இந்தப்போரின் தொடர்பாகத் தமிழக முதல்வர் அவர்கள், சட்டப் பேரவையிலும் மேலவையிலும் ஆற்றிய பேருரைகளையும், வானொலி உரையையும், சுதந்திர வங்கம் உதயமானதைப் பாராட்டிச் சட்டப் பேரவையிலும் மேலவையிலும் தீர்மானம் நிறைவேற்றி ஆற்றிய பேருரைகளையும் இங்கே தொகுத்துத் தருகிறோம் !

வணக்கம்.

சென்னை,
*20-10-1971*

செய்தி-மக்கள்தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

# வெற்றி நமதே

இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுத்திருப்பதைக் கண்டித்துத் தமிழ்நாடு சட்ட மன்றத்திலும் மேலவையிலும் முதல்வர் கலைஞர் அவர்கள் *1971*-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 6-ஆம் நாளில் முன்மொழிந்த தீர்மானம் :—

"கிழக்கு வங்கத்தின் ஜனநாயகக் குரலை மதிக்க மறுத்து, அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்திர வங்கதேச முழக்கத்தைச் செய்ய முன்வந்தபோது, அவர்கள் மீது ஈவு இரக்கமின்றி இராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டு பல லட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்ததோடு அல்லாமல் ஒரு கோடி அகதிகளை இந்திய நாட்டின் மீது சுமத்தியதன் மூலம் மறைமுகமான தாக்குதலைத் தொடங்கிவிட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி, இறுதியாக இந்திய மண்ணின் மீது படையெடுக்கவே துணிந்துவிட்ட செயலைத் தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, எதிரிகளை முறியடித்து இந்தியா பெருவெற்றி பெறுவதற்கு எல்லா விதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்குத் தரும் என்னும் உறுதியையும் மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீர மறவர்களை வாழ்த்துவதிலும் அவர்தம் அருந் தியாகச் செயல்களைப் போற்றுவதிலும் இப்பேரவை பெருமை கொள்கிறது.

வெளிப் பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை, உட்பகை எதுவும் உருவாகாத சூழ்நிலை தான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து, சாதிமத பேதங்கள், அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணி யாகத் திரண்டு நின்று, எதிரிகளை வென்றிட வேண்டிய அவசியத்தையும் இப்பேரவை வலி யுறுத்துகிறது.

சர்வாதிகாரக் கொள்கை, மக்களாட்சித் தத்து வத்தின் மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தின் இறுதி வெற்றி, இந்தியா போற்றி வருகிற ஜனநாயகத்திற்கே என்ற நம்பிக்கையை இப்பேரவை பிரகடனம் செய்கிறது.

தொடக்கக் காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய நாடு உலக நாடுகள் அனைத்திற்கும் தெளிவாக்கியிருப்பதோடு, நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவ்வண்ணம் ஆதரவு தர முன்வந்துள்ள நாடுகளுக்கு இப்பேரவை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகைசூடும் வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும் உறுதியும் கொண்டிடப் போருக்குத் தேவையான ஆள்—பொருள்—கருவி அனைத்தையும் வழங்கிடவும் பிரதமர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணை யாக இருக்கவும் தமிழ் நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டு மென்று இப்பேரவை கேட்டுக்கொள்கிறது.''

## தத்துவப் போர்

இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒரே மனதாக ஏற்றுக்கொண்டு தங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இது ஓர் உணர்ச்சி மயமான கட்டத்தில்-நாட்டின் எழுச்சி பொங்கி வழிந்து காணப்படுகின்ற நேரத்தில் நிறைவேற்றப்படுகிற மிக முக்கியமான தீர்மானமாகும்.

இன்றைக்கு இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த நெருக்கடியை எப்படியும் நாம் சமாளிப்போம் என்கின்ற உறுதியைப் பெற்றிருக்கிறோம் என்றாலும், எப்படி எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதன்படி நடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இன்று நேற்றல்ல—நீண்ட நெடுங் காலமாகவே, கடும்பகை இருந்து வந்திருக்கிறது. இந்தப் பகைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டிய தருணமாகத்தான் இந்தத் தருணம் வாய்த்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பாகிஸ்தான் இந்தியா மீது இன்றைக்குத் தொடுத்திருக்கின்ற இந்தப் போர் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது



தொடுத்திருக்கிற போர் என்று கருதுவதைக் காட்டிலும், ஒரு தத்துவம் இன்னொரு தத்துவத்தின் மீது தொடுத்திருக்கிற போர் என்று சொன்னால் அது மிகையாகாது.

தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பதுபோல சர்வாதிகார மனப்பான்மையோடு, சர்வாதிகாரக் கொள்கையில் வெறி பிடித்து அலைந்து கொண்டிருக்கிற பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி, இந்தியாவில் நாம் கட்டிக் காத்து வருகிற ஜனநாயகத் தத்துவத்தின் மீதும், நம்முடைய வாழ்க்கை முறையின் மீதும், நம்முடைய மதச் சார்பற்ற கொள்கையின் மீதும் இன்றைக்குப் படை எடுத்திருக்கிறார் என்று நாம் திட்டவட்டமாகக் கொள்ளவேண்டும்.

## தவறான பிரச்சாரம்

அமெரிக்க நாட்டுக்கு நான் சென்றிருந்த நேரத்தில் அங்கே ஒரு தவறான பிரச்சாரம், இப்போது பாகிஸ்தான் தொடுத்திருக்கிற போர் பற்றிப் பத்திரிகைகளில் கட்டுரை வாயிலாகச் செய்யப்படுவதை நேரில் காண்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தத் தகராறு இன்று நேற்று அல்ல. பல நூற்றாண்டுக்காலமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருந்து வருகிற தகராறினுடைய மற்றொரு கட்டம்தான் என்று அந்த நாட்டிலுள்ள சில பத்திரிகைகள் வருணித்திருப்பதை நான் கண்டேன்.

சில நிருபர்களைச் சந்தித்த நேரத்தில் அது தவறு என்பதற்கான விளக்கங்களை அளிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இது, இந்து—முஸ்லிம் தகராறு அல்ல. இந்தியாவில் இன்றைக்கு முஸ்லிம்களே இல்லாமல் இல்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தியாவில் இருக்கிற முஸ்லிம்களுடைய தொகை இன்றைக்குப் பாகிஸ்தானில் இருக்கிற முஸ்லிம் களின் எண்ணிக்கையைவிட அதிகமானது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது.

அந்த அளவுக்குப் பாகிஸ்தானைவிட இன்றைக்கு இந்தியாவில் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய உரிமைகள் இங்கே மதிக்கப்படுகின்றன. அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் அனைவருமே இந்து முஸ்லிம்கள் என்கிற அளவில் இல்லாமல் இந்தியர்கள் என்கிற அளவில் ஒன்றுபட்டு இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றுவதிலும், இந்த நாட்டுக்கு வருகிற ஆபத்துக்களைத் தவிர்ப்பதிலும் முன்னிற்கின்ற காட்சியினை நாம் காண்கின்றோம்.

ஆகவே இப்போது நடைபெறுகிற இந்தப் போராட்டம் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும், இந்துக்களுடைய நாட்டுக்கும் முஸ்லீம்களுடைய நாட்டுக்கும் நடைபெறுகிற போராட்டம் என்று யாரும் கற்பனைகூடச் செய்துகொள்ளத் தேவையில்லை என்று அந்த நிருபர்களிடையே சொன்னேன்.



அக்கிரமமாகவும், தணியாத வெறி காரணமாகவும் பலமுனைகளிலே கேடு உண்டாக்க வேண்டும் என்பதற்காகவும் மறைமுகமாக இருக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்கிற நிலைமையிலேதான் இன்று பாகிஸ்தானின் சர்வாதிகாரி இத்தகைய காரியங்களைச் செய்து வருகின்றார்.

இந்தத் தெளிவான விளக்கத்தை இந்தப் பேரவையில் நாம் அனைவரும் கொள்வதோடு, வெளியிலும் வற்புறுத்திக் கூறுவது நீண்ட நெடுங்காலமாக நாம் ஏற்படுத்தியிருக்கிற வகுப்பு ஒற்றுமையை இந்த நேரத்தில் நிலைநிறுத்தப் பயன்படும். போர்ச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வகுப்பு ஒற்றுமைக்கு உலை வைக்கின்ற முயற்சியை முறியடிக்கும் வகையிலும் இது அமையும் என்று நான் குறிப்பிட்டேன்.

### அகதிகள் பிரச்சினை

முதன் முதலாக இந்தியா பாகிஸ்தான் அகதிகளால் படையெடுக்கப்பட வேண்டிய நெருக்கடியான கட்டத்திற்கு ஆளானது. பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிற கிழக்கு வங்கத்தில் ஜனநாயக ரீதியில் நடைபெற்ற



தேர்தல் முடிவு மதிக்கப்படாமல், சர்வாதிகாரியினுடைய காலடியில் மிதிக்கப்பட்டு அந்த ஜனநாயக எழுச்சிக்கு நாயகனுகத் தோன்றிய திரு முஜிபுர் ரகிமான் சிறைப் பிடிக்கப்பட்டு, லட்சக்கணக்கான மக்கள் கிழக்கு வங்கத்தில் கொல்லப்பட்டு, ஒரு கோடி மக்களுக்கு மேல் அகதிகளாக இந்தியாவுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கிறுர்கள் என்றால் வேறு நாடுகளில் உள்ளவர்களே என்னிடத்தில் கேட்கிறுர்கள், "55 கோடி மக்கள் இருக்கிற இந்தியாவில் இன்னும் ஒரு கோடி மக்களைத் தாங்கிக் கொள்ளக்கூடாதா?" என்று.

ஐம்பத்தைந்து கோடி மக்கள் தொகை இருக்கிற ஒரு நாட்டில் மேலும் மக்கள் தொகை பெருகுகிறது என்பது வேறு, திடீரென நுழைகிறுர்கள் என்பது வேறு.

நம்முடைய நாட்டு மக்கள் தொகை பெருகக்கூடாது என்பதற்காகப் பல்வேறு திட்டங்களையும், முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிற நேரத்தில், பெருகுவது மாறித் திடீரென்று மக்கள் தொகை நுழைந்தால் அதை ஓர் அரசு எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும்? எப்படிச் சமாளிக்க முடியும்? சமாளிக்க முடியாமல் எவ்வளவு கஷ்டத்தை இந்திய அரசு அனுபவிக்கிறது? இதுவரை எவ்வளவு கஷ்டத்தை இந்திய அரசு அனுபவித்திருக்கிறது? இதுவரை எவ்வளவு கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது என்பவற்றை எல்லாம் அனைத்துலக நாடுகளுக்கு நாம் எடுத்து விளக்கியிருக்கிறேம்.

இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அனைத்துலக நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் மூலம் இந்தியாவின் நிலைமையை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறுர்கள்.

பாகிஸ்தான் செய்கிற அட்டூழியங்கள் வேறு நாடுகளில் இருக்கிற அரசுகளால் ஒருவேளை மறைக்கப்பட்டாலும் அந்த நாட்டு மக்கள் உண்மையை நிச்சயமாக உணர்ந்திருக்கிறுர்கள் என்றே நம்புகிறேன்.

### அமெரிக்க மக்களின் அனுதாபம் யாருக்கு?

குறிப்பாக, அமெரிக்க நாட்டு அரசாங்கம் இந்திய–பாகிஸ்தான் விஷயத்தில் இருவரையும் சமமாகவே கருதுகிறது என்றாலும், இந்தியாப் பக்கம் இல்லாமல் பாகிஸ்தானை முழு மூச்சாக ஆதரிக்க அல்லாடிக் கொண்டிருக்கிறது

என்றாலும் அந்த நாட்டில் நான் கவனித்த வரையில் அமெரிக்க நாட்டு மக்கள் பெரும்பாலானவர்கள் தங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை இந்தியாவின் பக்கம்தான் திருப்பிவிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்க டெலிவிஷனில் அவர்கள் கண்ட காட்சிகளைப்போல—அந்த அளவுக்குச் செய்திகளை நாம் நம்முடைய பத்திரிகைகளில் கண்டிருக்க முடியாது. கிழக்கு வங்கத்திலே பாகிஸ்தான் நடத்திய அட்டூழியங்களை—வெறியர்களுடைய அடக்குமுறைகளை நேரிடையாகப் படம் எடுத்து டெலிவிஷனில் காட்டினார்கள். டாக்கா நகர் அருகில் பல வீடுகளுக்குத் தீயிடப்பட்டிருப்பதைப் பார்த்தேன். மகளிர் பலர் மானபங்கம் செய்யப்பட்டதை—கற்பழிக்கப்பட்டதைப் பார்த்தேன். அதுமாத்திரம் அல்ல. அந்தப் பிணங்களைக் கூடப் புதைக்க முடியாமல் நீண்ட குழி வெட்டி அதில் ஒன்றின் மீது ஒன்றாக அவற்றை இழுத்தெறிந்த காட்சிகளையும் டெலிவிஷன் படத்தில் காட்டினார்கள்.

இப்படிப்பட்ட கோரக் காட்சிகளை எல்லாம் கண்ட அமெரிக்க மக்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய முழு ஆதரவை இன்றைக்கு இந்தியாப் பக்கம் திருப்பியிருக்கிறார்கள்.

அந்த நாட்டு அரசு எவ்வாறு இருந்தாலும் இன்றைக்கு அந்த நாட்டு மக்களுடைய ஆதரவு இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறது.

பாகிஸ்தான் வெறியர்களின் அட்டகாசங்களையும், அட்டூழியங்களையும், துரத்தப்பட்டிருக்கிற அகதிகளின் எண்ணிக்கையையும் எல்லா நாட்டு மக்களும் அறிந்திருக்கிறார்கள்.

## புலியை இடறியிருக்கிறார் யாகியாகான்

ஆரம்பத்தில் ஒரு கோடி மக்களை நாம் தாங்கித்தீர வேண்டிய கஷ்டம் ஏற்பட்டது. அதற்கடுத்துத் தங்களுக்குத் தனி நாடு வேண்டுமென்ற அளவுக்கு உணர்ச்சி மேலிட்டு, அது ஒடுக்கப்படுகிற நிலைமையில் வங்கதேச விடுதலை வீரர்கள் சுதந்திரச் சிங்கநாதம் முழக்கி—ஜனநாயகத்தை அழிக்கக் கிளம்பிய சர்வாதிகார ஆட்சியை எதிர்த்தார்கள்.

அதனால் ஆத்திரம் அடைந்த பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி, தன்னுடைய நாட்டில் ஒரு பகுதி என்று அவர் கருதிக்கொண்டிருக்கிற-கற்பனை செய்து கொண்டிருக்கிற கிழக்கு வங்கம் கைவிட்டுப் போய்விடும் என்பதனை உணர்ந்தவுடன் தான் இந்தியா மீது படை எடுத்திருக்கிறார்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல், தூங்குகின்ற புலியை இடறியிருக்கிருர் பாகிஸ்தானின் சர்வாதிகாரி என்று சொன்னுல் அது மிகையாகாது.




இந்தியாவின் விமானப் படைத் தளங்கள் சிலவற்றின் மீது அனுவசியமாகத் தாக்குதலே நடத்தினுர்கள். நாம்தான் இந்தப் போராட்டத்திலே குதித்தவர்கள் என்றெல்லாம் உலகத்தினர் கற்பனே செய்து கொள்ளவேண்டுமென்ற முயற்சிகளேச் செய்தார்கள். ஆனுல் அவை அனைத்தும் தவறு—பொய்யான வாதம் என்பதை ஆக்ரா மீதும், அமிர்த சரஸ் மீதும் அவர்கள் நடத்திய விமானப் படையெடுப்பு மெய்ப்பித்து விட்டது.

### இழப்பின் தொடக்கம் இது ; இறுதி....

ஆனுல் ஒருநாள், நம் மீது அவர்கள் தாக்குதல் நடத்தினுர்கள் என்ற செய்தியை நம் நாட்டுப் பத்திரிகைகளும், வெளி நாட்டுப் பத்திரிகைகளும் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்றைக்கு நாம் நடத்துகிற எதிர்த்தாக்கு தலேச் சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் திணறிக் கொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கிருேம். இந்திய நாட்டு விமானங்கள், உள்ளே பிரவேசித்த பாகிஸ்தான் விமானங்களேச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றன. இன்றையக் கணக்குப்படிப் பார்த்தால் பாகிஸ்தானின் 47 விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டிருக்கின்றன. இந்திய விமானங்கள் 17 தான் சுட்டு வீழ்த்தப்பட்டன. பாகிஸ்தான் 47 விமானங்களே இந்தப் போரினுல் இழந்திருக்கிறது.

மேற்குப் பாகிஸ்தானிலும், 61 டாங்கிகளே பாகிஸ்தான் இழந்திருக்கின்றது என்கிற புள்ளி விவரம் நமக்குக் கிடைத்

திருக்கிறது. மேலும் 3 கப்பல்களை, பாகிஸ்தான் இழந்திருக்கிறது. நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றையும் பாகிஸ்தான் இழந்திருக்கிறது.

இவைகள் எல்லாம் பாகிஸ்தானின் இழப்பின் ஆரம்பம்தான். இழப்பின் முடிவு எதுவாக இருக்குமோ? ஒரு வேளை பாகிஸ்தானாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தியாவின் பலம் பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கும் காட்டப்படுகிற அளவில் உயர்ந்திருக்கிறது என்பதில் பெருமைப்பட வேண்டும்.

நமது போர் வீரர்களுக்கு உற்சாகத்தை அளிக்கவும், அவர்கள் போர்க்களத்தில் உத்வேகத்துடன் போராடவும் அவர்களுக்குப் பின்னால் நாம் அனைவரும் இருக்கிறோம் என்கிற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும்படிச் செய்ய வேண்டும்.

### கோஸிஜின் அறிக்கை கூறுவதென்ன ?

இன்றையக் காலைப் பத்திரிகைகளில் வந்திருக்கும் செய்தியானது மேலும் நமக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. சோவியத் நாட்டின் பிரதம மந்திரி கோஸிஜின் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். 'இந்தத் தகராறில் உலக நாடுகளில் எந்த நாடாவது தலையிட்டால் அது தவறு' என்று அவர் கூறியிருப்பது போற்றத்தக்கதாகும். அதாவது 'இந்தப் போரில் வேறு எந்த நாடாவது தலையிட்டால், நாங்களும் தலையிடுவோம்' என்று கூறுவதாகத்தான் நாம் இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நல்லெண்ணத்தோடு இந்தியாவை அணுகுகின்ற நாடுகளுக்கெல்லாம் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### வங்க தேசம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாட்டு மக்கள் இந்தப் போராட்டத்தில் தங்களுடைய கடமையினைக் கட்சி, மதம் இப்படிப்பட்ட பல்வேறு வேறுபாடுகளைக் கடந்து நிச்சயமாக வழங்குவார்கள் என்பதனைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், தீர்மானத்தை முன்மொழிந்தவன் என்ற முறையில் என்னுடைய அன்பான நன்றியை மிகுந்த பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் முன்மொழியப்பட்டு வழிமொழியப்படுகிற நேரத்தில் இந்தத் தீர்மானத்தை வலுப்படுத்துகிற அளவுக்கு டெல்லி நாடாளு மன்றத்தில் இருந்து நமக்குக் கிடைத்த செய்தி பங்களா தேஷ் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது என்பதாகும்.

பங்களாதேசம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது என்ருல் கிட்டத்தட்ட ஐந்து கோடி மக்களைக் கொண்ட ஒரு புதிய நாடு இன்றைக்கு முளைத்திருக்கிறது என்று பொருளாகும். நான் ஏன் முளைத்து இருக்கிறது என்று சொன்னேன் என்ருல், அது துளிர் விட்டுச் செடியாகி, அரும்பு வைத்துக் காயும், கனியும் குலுங்குகிற அளவுக்கு வெகு விரைவில் அகில உலக நாடுகளில் ஒன்ருக அமைய இருக்கிறது என்பதனுல்தான்.



அமெரிக்க அரசு பாகிஸ்தானுடைய போக்கை ஆதரித்து இருக்கிறது என்பதை இங்கே பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் சொன்னுர்கள்.

## மக்களும் அரசும்

நான் குறிப்பிட்டது அமெரிக்க நாட்டு மக்களுடைய ஆதரவு இந்தியாவுக்கு இருக்கிறது என்றுதான். அமெரிக்க அரசினுடைய ஆதரவு இந்தியாவுக்குச் சரியான அளவில் இல்லை. அவர்கள் அதிலே மழுப்புகிருர்கள் அல்லது மறைக்கிருர்கள். அல்லது மறைமுகமாகச் சர்வாதிகார பாகிஸ்தான் பக்கம் சாய்கிருர்கள் என்ற அந்தக் கருத்தில் நான் எந்தவிதமான மாறுபாடும் கொண்டிடவில்லை.

ஒரு நாட்டின் மக்களுடைய எண்ணம் மதிக்கப்படுகின்ற எண்ணமாகும். ஏனென்ருல் அமெரிக்க நாடு ஜனநாயக நாடு. அங்கே மக்கள், அரசை மாற்றுவதற்கு வல்லவர்கள். அந்தச் சூசகத்தை நான் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினுல் அமெரிக்க நாட்டு மக்கள் நம் பக்கம் இருக்கிருர்கள் என்று சொல்கிறேனே அல்லாது வேறு அல்ல. ஒரு சர்வாதிகார நாடாக இருந்தால் அந்தச் சர்வாதிகாரி வாழ்கிற வரையில்—ஆள்கிற வரையில் அந்த நாட்டு அரசின் கொள்கை மாருதிருக்கலாம். அங்கே மக்கள் கருத்துக்கு மதிப்பு இல்லாத காரணத்தினுல், ஜனநாயக நாட்டில்—மக்கள் நினைத்தால் அது மகேசன்

குரலாக மாறி—இருக்கிற ஆட்சியை மாற்ற முடியும். அப்படி மாறியிருக்கிற நிலையையும் ஜனநாயக நாடுகளில் நாம் பார்க்கிறோம்.

அதன் காரணமாகத்தான் அமெரிக்க நாட்டு மக்களின் எழுச்சி நம் பக்கம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான், முன்பு உதவி ஜனாதிபதியாக இருந்தவரும் இப்போது செனட்டராக உள்ளவருமான திரு. ஹம்ப்ரே அவர்களைச் சந்தித்து அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் என்னிடம் சொன்னது, ''உங்கள் பிரதமரிடத்தில் சொல்லுங்கள், அமெரிக்க நாட்டு மக்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள். நான் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறேன். என்போல் பல செனட்டர்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள்'' என்பதுதான்.

செனட்டர்கள் என்கிற போது அங்கே நூறு செனட்டர்கள் இருக்கிறார்கள். ஐம்பது மாநிலங்கள்—மாநிலத்திற்கு இரண்டு செனட்டர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த செனட்டர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற அறையைப் பார்த்தால் மூன்று முதல் மந்திரியின் அறைக்குச் சமமான இடமாக இருக்கிறது.

அந்த இடமே போதவில்லை என்று அவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இவ்வளவு பெரிய பணக்கார நாட்டில் எனக்கு இருக்கிற சிறிய அறையைப் பாருங்கள் என்றால் இதை இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுப் பொறுமைப்பட வேண்டும் என்று சொல்லவில்லை.

அந்த அளவுக்கு நாள்தோறும் 500 கடிதங்களுக்குப் பதில் எழுத வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு செனட்டருக்கும் 15 அலுவலர்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு அங்கே பணி புரிந்து வருகிறார்கள். அவர்களது கருத்துக்கு மிகுந்த மதிப்பு இருக்கிறது. அதற்காகச் சொன்னேன்.

அமெரிக்க நாட்டில் நிக்சன் கட்சியைச் சேர்ந்த திரு கூப்பர் அவர்களையும் சந்தித்தேன். மிகப் பெரியவர்—வயதானவர்—இந்திய நாட்டின் தூதுவராக இருந்தவர்—இந்திய மக்களுடைய அன்பு உள்ளத்தை நன்கு தெரிந்து வைத்திருக்கக்கூடிய பெரியவர் ஆவார். அவர் நிக்சன் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் முழு அன்பும் முழு ஆதரவும் இந்தியாவின் பக்கம்தான். இதை இந்திய மக்களிடத்தில் மிகத் தெளிவாகச் சொல்லலாம் என்று என்னிடத்தில் அறிவித்தார்கள்.

### வங்கத்தை அமெரிக்கா அங்கீகரிக்கும் நாள் வரும்

இவைகளை எல்லாம் சொல்லுவதற்குக் காரணம் அங்கே தேர்தலுக்கு ஓராண்டுக் காலமே இருக்கிறது. மக்கள் மன நிலைக்கேற்ப அங்கே ஆட்சி மாறக்கூடும். இன்றைக்கு இருக்கிற அரசு நம்முடைய நியாயத்தை உணர மறுத்தாலும், இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பங்களா தேஷை அங்கீகரிக்க மறுத்தாலும் நாளை என்ன ஆகும் என்று சொல்ல முடியாது.



முன்பு சீனவை அங்கீகரித்தார்களா ? யாரை அங்கீகரித்தார்கள் ? தைவானை அங்கீகரித்தார்கள். ஒரு தீவில் வசித்த சியாங்கே ஷேக்கை ஆதரித்தார்கள். பாகிஸ்தானைத்தான் நாங்கள் அங்கீகரிப்போம் என்று சொல்வது போல அன்றைக்குச் சியாங்கே ஷேக்கை ஆதரித்தார்கள். தைவானை ஆதரித்து—ஐ.நா. சபையில் உட்காருவதற்கு இடம் ஒதுக்கினர்கள். ஆனல் இன்றைக்கு நிலைமை என்ன ? சியாங்கே ஷேக் தூதுவர் உட்கார்ந்த இடத்தில் மாசே துங்—சூயென்லாய்—அரசாங்கத்தின் தூதுவர் உட்காருவதை நாம் காண்கிருேம். சீனவை ஒப்பிட்டுப் பேச விரும்பவில்லை. நிலைமையைத்தான் ஒப்பிட்டுப் பேச விரும்புகிறேன்.

அதைப் போல ஒரு காலத்தில் நிச்சயமாக பாகிஸ்தான் சர்வாதிகாரிகளின் பிரதிநிதியை விட்டு—பங்களாதேஷ் பிரதிநிதியை ஏற்கிற காலம் வரும்—பங்களா தேஷை அங்கீகரிக்கிற காலமும் வரும்.

### தியாகத்தால் புகழ்பெற வேண்டும்

ஆகவேதான் இன்றைக்குப் பங்களாதேஷை இந்திய அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான செய்தி வந்திருக்கிறது. இன்னும் இருவார காலத்திற்குள் பங்களா தேஷ் முழுவதும் பாகிஸ்தான் கையில் இருந்து விடுவிக்கப் பட்டு விடுதலை வீரர்களிடத்தில் ஒப்படைக்கப்படுகிற செய்தி நிச்சயமாக வர இருக்கிறது என்பதனை நாம் எல்லாம் எதிர்பா க்கலாம்.

இந்த நேரத்திலே நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில்-குறிப்பாக இந்தத் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கிற தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில்

வகுக்கப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை எல்லாம் காங்கிரஸ் கட்சியினுடையே தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலாளிகள், வணிகக் கோமான்கள்—இவர்கள், போரைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சந்தை, இருட்டு வியாபாரம் இவைகளிலே தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள முனையக்கூடாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னார்கள்.


நாம் கேள்விப் பட்டிருக்கிறோம், சென்ற உலக மகா யுத்தத்தின்போது, சாதாரணமாக ஏழையாக இருந்த ஒருவர் பெரும் பணக்காரராகி, எப்படி வசதி என்றால் 'யுத்தத்தில் நன்றாகச் சம்பாதித்து விட்டார்' என்பதாக. இப்படி ஓர் அடைமொழியைச் சேர்த்துச் சொல்லப்பட்டதை எல்லாம் நாம் இந்தத் தடவை பெறக்கூடாது. இந்தத் தடவை யுத்தத்தில் கரமிழந்தார், கால் இழந்தார், நிறையத் தியாகம் செய்தார் என்கிற புகழை ஈட்டிக் கொள்ள வேண்டுமேயல்லாது யுத்தத்தில் சம்பாதித்து விட்டார் என்கிற அடைமொழியைப் பெறுகிற அளவுக்கு அந்தஸ்துத் தோன்றுவதற்கு இடமளித்தல் ஆகாது.

### போர்வீரர் குடும்பமும் அரசாங்கமும்

**அதில் தமிழ்நாட்டு அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.**

நம்முடைய நண்பர் திரு ஹண்டே அவர்கள் இரண்டு மூன்று கருத்துக்களை சொன்னார்கள். அவர்கள் இன்றைக்கு குறிப்பாக போர்க்களத்திற்குச் செல்லுகிற வீரர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றார்கள். சாவில் இருந்து போர் வீரர்களைக் காத்துக் கொள்ளப் பாதுகாப்பு இல்லை. போர்க்களத்திற்குச் செல்கிறவர்களே ஓரளவு திரும்பி வர மாட்டோம் என்கிற உறுதியோடு செல்கிறார்கள். வெற்றி பெற்றே திரும்பி வருவோம் என்கிற அளவில் செல்கிறார்கள். போர்க் களத்திற்குச் சென்றவர்களை நாம் பார்த்திருக்கிறோம்—கேள்விப்பட்டிருக்கிறோம். போர்க்களத்திற்குச் சென்றவனின் உடை திரும்பி வந்து மாதாவின் கண்ணீரால் நனைந்தது என்பதாக. அவன் திரும்பவில்லை, அவன் அணிந்திருந்த உடைதான் வந்தது என்று. இன்னும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், எத்தனையோ அண்ணன்மார்களை போர்க்களத்தில் இழந்த தம்பிமார்கள் கண்ணீர் விட்டு நின்றதாக. ஏன் இதுவும் கூடக் கேள்விப்பட்டிருக்கிறோம். காதலியார்கள்—போர்க்களத்தில் தங்கள்

காதலனை இழந்து—பூ இழந்து, பொட்டு இழந்து, பொலிவிழந்து சோகச் சித்திரமாக கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள். என்பதை.



ஆகவே, எந்தச் சூழ்நிலையில் சென்றான்- யுத்தத்தில் மாண்டான் என்பது வேறு. இப்பொழுது சாவதற்காகவே செல்கிறான்; போர் முனைக்குச் செல்லும் வீரர்கள் சாவதற்காகவே செல்கிறவர்கள். அவர்கள் தங்களைப் பிணமாக ஆக்கிக் கொள்வதன் மூலம் இந்த நாட்டு மண்ணின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். இந்த நாட்டுச் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும். இந்த நாட்டு மண்ணின் உரிமை காப்பாற்றப் படவேண்டும் என்று சொல்கின்ற போர்வீரர்களின் குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது.

டாக்டர் ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ரிசர்வ் நிதியிலிருந்து உதவக்கூடிய நிறுவனங்கள் வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

### அள்ளித்தருக

இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைப் போர் வீரர்கள் மட்டும் சமாளித்து விடுவார்கள் என்று நாம் கைகட்டி, வாளா இருத்தல் கூடாது; அப்படி இருக்கவும் முடியாது. இந்திய நாட்டில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் நெருக்கடிப் பொறுப்புகளை உணர்ந்தாக வேண்டும். போர்க் கருவிகளைப் புதிது புதிதாக வாங்குவதற்கும், போர்த் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் ஏராளமான பணம் தேவைப்படும். அதை வட்டியின்றித் தருவதற்கும் இந்தியாவில் இருக்கிற ஒவ்வோரு குடிமகனும் தயாராக இருக்க வேண்டும். அதில் தயக்கம் காட்டக் கூடாது.

அதிலும், தமிழகம் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும். நான், தமிழ் நாட்டில் இருக்கிற நாலரை கோடி மக்கள் மீதும் நம்பிக்கை வைத்து, இதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். போருக்கான நிதியைத் திரட்டுகிற பணி ஆரம்பமாக வேண்டும்.


தமிழகத்தில் பொதுப் பணியாளர்கள், பொது நோக்கு டையவர்கள் போர் வீரர்களுக்குத் தேவைப்படுகிற மருந்து களை வாங்கிப் போர்முனைகளுக்கு அனுப்புதல், தேவையான உடைகளை வாங்கி அனுப்புதல், மேலும் போர்முனைக்குச் சென்று போரில் ஈடுபட்டிருக்கும் வீரர்களின் குடும்பங் களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருதல் ஆகிய காரியங்களில் நாட்டில் உள்ள நல்லவர்கள் ஈடுபடவேண்டும். இப்போது நாம் நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம். யுத்த நேரத்தில் போர்க்களத்திலே இருக்கிற வீரர் களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவும், போர்க்காலச் செலவுகளை ஈடுகட்டவும் ஒவ்வொரு நாளும் செலவழித்து வருகின்ற ரூபாய்க்கு வழி வகை செய்யவும் அரசு மாத்திர மல்லாமல் இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த வகையிலே, யுத்த நிதி திரட்டப்படுமானால் அதற்கு நம்மால் இயன்ற தொகையைத் தந்திட வேண்டும்.

தமிழ் நாட்டு மக்கள் நல்ல காரியத்திற்குத் தொகை வழங்க என்றுமே தயங்க மாட்டார்கள். அதுவும் இப்படிப் பட்ட நெருக்கடியான காரியத்திலே இந்த மண்ணுக்கு வந்த ஆபத்தை நீக்குகின்ற வகையில் அவர்கள் மனந்தளராமல் பெருந் தொகையைத் தந்துதவுவார்கள் என்பது நமக்கெல் லாம் தெரியும்.

இன்று காலையிலே பேரவையிலேகூட நான் அறிவித் திருக்கிறேன். அமைச்சர் பெருமக்கள் 500 ரூபாய் யுத்த நிதிக்குத் தருகிறார்கள் என்றும், சட்டப் பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் 100 ரூபாய்க்குக் குறையாத தொகையைத் தரவிருக்கிறார்கள் என்றும். அவர்களுக்குக்கெல்லாம் இந்த மன்றம் இளைத்ததில்லை. இங்கிருக்கும் உறுப்பினர்கள் நூற்றுக்கு மேல் இருநூறு கூடக் கொடுக்கத் தயாராக இருப்பார்கள் என்பதை அறிவேன். ஆகவே 100 ரூபாய்க் குக் குறையாத ஒரு தொகையை இந்த மன்றத்திலே இருக் கிற உறுப்பினர்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். (கையொலி எழும்புகிறது) தருவீர்கள் என்பதற்கு அடையாளமாக நான் உங்களுடைய கையொலியைப் பெற் றிருக்கிறேன்.

## இரத்த தானம்

இரத்த தானம் செய்வது மிக முக்கியமான செயலாகும். அதற்கு ஏற்ற வகையிலே இங்குள்ள சட்டப் பேரவை உறுப் பினர்களும், மேலவை உறுப்பினர்களும் ரத்த தானம் செய் யத் தங்களுடைய ' குரூப் 'புகளைப் பார்த்துக் கணக்கெடுக்க இங்கேயே நாளை அல்லது மறுநாள் மருத்துவர்கள் வந்து



சோதனை செய்ய இருக்கிறார்கள். ரத்த தானம் செய்ய விரும்பும் சட்டப் பேரவை உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் இங்கேயே யுத்தத்திலேஈடுபட்டிருக்கும் சிப்பாய்களுக்குத் தேவையான ரத்தத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் தருகின்ற ரத்தத்தினால் தேவையான ரத்தங்களை எல்லாம் தந்துவிடுகிறோம் என்பதில்லை. நாம் தருகின்ற பணம் மூலம் போருக்குத் தேவையான எல்லாப் பணத்தையும் தந்துவிடுகிறோம் என்பதுமில்லை. இப்படி நாம் கொடுப்பதன் மூலம் ஓர் அடையாளமாக நம்முடைய உணர்ச்சிகளைக் காட்டுகின்றோம். சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல் இந்த அடையாளம் இந்தியா முழுவதும் நிச்சயமாகப் பரவும். அப்படிப் பரவும் பொழுது, இந்தியா வெற்றிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக் கூறுகள் அதிகம் ஆகும். இந்தியாவின் வெற்றி ஐயப்பாட்டுக்குரியது என்று யாரும் கருதத் தேவையில்லை. உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் 10 அல்லது 15 நாட்களிலே கூடப் போர் முடிந்துவிடக்கூடும் என்கிற அளவுக்கு இன்றைக்கு நம்முடையே வீரர்கள் மிக்க வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள்.

## இறுதி யுத்தம்

யாகியாகான் சொல்லியிருக்கிறார் இதுதான் என்னுடைய கடைசி யுத்தம் என்று. அவருடைய முடிவை—சாதகத்தை இவ்வளவு முன்கூட்டியே தெரிந்திருப்பதற்கு நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆகவே, பாகிஸ்தான் இதைக் கடைசி யுத்தமாக நடத்தட்டும். இனிமேல் நாங்கள் யார் பக்கமும் திரும்ப மாட்டோம் என்கிற பாடத்தைப் பெறும் அளவிற்கு இந்தியா அவருக்கு நல்ல அடியைக் கொடுக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அதற்கு ஏற்ற வகையில் வீரம் செறிந்த தமிழ்நாட்டு மக்கள் இந்திய அரசுக்கும் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்திக்கும் நம் எல்லையைக் காக்க எடுக்கும் பணிகளிலே எந்த நேரத்திலேயும் நல்ல ஒத்துழைப்பைத் தருவார்கள் என்பதற்கு அடையாளமாக இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற இருக்கிறோம். நான் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை உறுப்பினர்கள் ஒரே மனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

## வெற்றி நமதே!

இன்று கொடி நாள். கொடியவர் ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தகர்த்து வெற்றிக் கொடி ஏந்திய இந்தியா சூளுரைக்கும் நாளும் இந் நாளேயாகும்.

இந்தியா விடுதலை பெற்றபோது பாகிஸ்தான் தோன்றியது. தோன்றிய போதே அந்த நாடு ஓர் அவலட்சண அமைப்போடு தோன்றியது. மேற்குப் பாகிஸ்தானுக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்கும் இடையிலே ஆயிரம் மைல், அந்த ஆயிரம் மைலுக்கு இடையிலே நமது இந்திய பூபாகம்.

உலகிலே எந்த ஒரு நாடும் இப்படி இடையிலே ஆயிரம் மைல்களை இரு பகுதிகளுக்கிடையே பெற்றிருக்கவில்லை.

அமைப்பு முறையிலே மட்டுமல்லாமல் ஆதிக்க வெறிக்கு அடிமைப்படுவதிலும் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பெருந் தொல்லைக்கு ஆளாயினர்.

அவர்களது வாழ்க்கைத் தரம் உயரவில்லை. மொழி உரிமை நசுக்கப்பட்டு மொழி ஆதிக்க வெறி உச்சக் கட்டத்திற்குச் சென்று அந்த மக்களின் உணர்ச்சி, எரிமலைத் தீக்குழம்பாயிற்று.

தங்கள் மாநில உரிமைகள் நசுக்கப்படுவதைத் தாங்காத கிழக்கு வங்க மக்கள், ஜனநாயக ரீதியில் தங்கள் தீர்ப்பைச் சென்ற ஆண்டு தேர்தலில் வழங்கினர்.



மாநில உரிமை கேட்ட மக்களின் குரல்வளையை நெரிப்பது போல், தேர்தல் தீர்ப்பைப் புறக்கணித்து விட்டுக் கிழக்கு வங்க மக்களின் மதிப்பிற்குரிய தலைவர் முஜிபுர் ரகிமானையும் சிறையில் அடைத்து விட்டு, இலட்சக்கணக்கான கிழக்கு வங்கமக்களின் உயிரையும் பறித்து ஒரு கோடி மக்களை அகதிகளாக இந்தியாவுக்குத் துரத்திவிட்டு மனிதாபிமானமற்ற முறையில் பேயாட்டம் போடத் தொடங்கியது பாகிஸ்தானின் சர்வாதிகார ஆட்சி.

மிதிபட மிதிபடப் புழுவும் புலியாகும் என்பதற்கேற்ப, கிழக்குப் பாகிஸ்தான், கிழக்கு வங்கமாகி, கிழக்கு வங்கம், ' பங்களா தேஷ் ' எனச் சுதந்திர நாடாகத் தன்னை பிரகடனப்படுத்திக்கொண்டது.

பங்களா தேஷின் முக்திபாகினி என்ற விடுதலைப் படையினர், பாகிஸ்தான் ராணுவ ஆட்சிக்கு மரண அடி கொடுக்கத் தொடங்கியதும் ஆதிக்க வெறியர் யாகியாகானின் ஆத்திரம் இந்தியா மீது திரும்பியது.

" பங்களா தேஷ் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை" என்று வலியுறுத்தியது இந்தியா செய்த குற்றமாம்.

அதற்காக அழகுமிகு தாஜ்மகால், ஒளியுமிழும் ஆக்ரா ஆகியவற்றின் மீது குண்டு வீச்சு. சீக்கியரின் பொற்கோவில் எழுந்துநிற்கும் அமிர்தசரஸ்மீதும் ஸ்ரீநகர்,ஜோத்பூர் போன்ற இந்திய மண்ணிலும் எதிரிகளின் திடீர்த் தாக்குதல்.

இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுப்பு ! ஆம்; தூங்கும் புலியை இடறி விட்டார்கள். இப்போது அதன் விளைவை அனுபவிக்கிறார்கள்.

### காய்ச்சலும் பாய்ச்சலும்

விரைவில் பங்களா தேஷில் பாகிஸ்தானின் படை இருந்த இடம் தெரியாமல் போகும். இந்திய நாடாளுமன்றத்தில் இந்தியாவின் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களால் அங்கீகாரப் பிரகடனம் செய்யப்பட்ட " பங்களா தேஷ் " புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடியபடி விரைவிலே பறக்கப் போகிறது.

பாகிஸ்தானின் தோல்விக் காய்ச்சல், இந்தியா மீது கடும் பாய்ச்சலுக்குக் காரணமாவதில் வியப்பில்லை. நெருக்கடி நீண்ட நாள் இருக்குமா என்பதை விட முற்றுமா என்ற கேள்விக்கு நாம் விடை கண்டாக வேண்டும். முற்றக் கூடும். எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

### நமது பொறுப்பு

போர்க்கால விளைவுகள், போருக்குப் பின் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் இவைகள் அனைத்தையும் மனத்திற் கொண்டு நாடு நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும்.

இந்த மண்ணைக் காக்கும் போரில் மான மறவர்கள் களம் நோக்கிச் சென்ற வண்ணம் இருக்கின்றனர்.

தாயின் அன்பு முத்தம் பெற்றுத் துப்பாக்கி ஏந்திக் களம் புகும் வீரர்கள்—தந்தையின் ஆசி பெற்றுத் தோள் தட்டிச்

செல்லும் தகைமைசால் மைந்தர்கள்—தோகையாள் கண்ணீர் துடைத்து எதிரியின் வியூகத்தைப் பிளக்கச் செல்லும் இளங் காளையர்—மழலைக்கு முத்த மழைபொழிந்து மாற்றாரைப் புறங்காணப் பறந்தோடும் புறநானூற்றுச் செல்வங்கள்—இவர்கள் எல்லாம் சாவின் கோரக் கரங்களுக்கு அஞ்சாமல் சமர்க்களம் செல்லும் தியாகச் சுடர்கள் அன்றோ !

விடைபெற்றுக் களம் சென்ற மகனின் ராணுவ உடைகள் மட்டும் திரும்பி வந்து அவைகளைக் கண்ணீரால் நனைக்கும் தாய்களின் பாதங்களுக்கு மலர்கள் தூவி வணங்குகிறோம். என்றாலும், அந்தத் தாயும் அந்தக் குடும்பமும் வாழும் பொறுப்பை நாமல்லவா ஏற்றுக்கொள்ள வேண்டும்?

களத்தில் நிற்போர் காக்கி உடை அணிந்த வீரர்கள்.... அந்த உடை அணியாத நாம் போர்க் களத்தில் இருக்கிற உணர்ச்சியோடு காரியங்கள் ஆற்றியாக வேண்டும்.

வெளிப் பகை யுத்தத் தளவாடங்களோடு வரும். உட்பகை, கறுப்புச் சந்தைக்காரர்கள், கொள்ளை வியாபாரிகள், பதுக்கல்காரர்கள், அவசர நிலை உணராமல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் ஐந்தாம் படையினர் ஆகியோர் உருவிலே வரும்.

அவர்கள் மீது அரசு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், எதிரிகளுக்கு இடம் கொடுத்த தீங்கினைச் செய்த குற்றத்திற்கு ஆளாகும்.

அவர்களை அரசு மட்டுமன்றி நாட்டு நலனில் அக்கறையுள்ள பொதுமக்களும் அடையாளங்காட்டிடத் தவறக் கூடாது.

### ஐந்தாம் படையினர்

போர் நேரத்தில் வதந்திகள் எதிரியின் கணைகளை விடக் கொடியவைகளாகும். வதந்திகளைப் பரப்புவோர் ஐந்தாம் படையினரில் ஒரு பிரிவினரேயாகும்.

போர்க் காலத்தில், உற்பத்தி பெருக, தொழிலாளத் தோழர்களும், தொழில் அதிபர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்தாக வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு—நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இவைகளை மாணவ நண்பர்கள் உணர்ந்து பணியாற்றுகிறார்கள் என நம்புகிறேன். அவர்களிடையே இந்தியாவின் எதிரிகள் மாணவர் வேடத்தில் நுழையக் கூடும்—தூண்டி விடக் கூடும். அந்த எதிரிகள் தொலைவிலிருந்து அல்ல ; துரோகச் சகதியிலிருந்து முளைத்திருப்பவர்களேயாகும். அவர்

கள் சூது மதிக்கு மாணவர்களும் மற்றவர்களும் இரையாகி விடக் கூடாது.

### பாதுகாப்பு நிதி

போருக்கு நிறைய நிதி தேவைப்படுகிறது. நேற்றுச் சட்டப் பேரவையில் நிதி பற்றி நான் அறிவித்த பிறகு " யுத்த நிதி ' குவியத் தொடங்கி விட்டது. நிதி அனுப்புவோர் 'நாட்டுப் பாதுகாப்பு நிதி' என்ற தலைப்பில் (நேஷனல் டிபன்ஸ்ஃபண்ட்) என்ற தலைப்பில் தமிழக அரசுத் தலைமைச் செயலகத்திற்கு முதலமைச்சரின் முகவரிக்கு அனுப்பிட வேண்டுறேன்.

போரில் பாதிக்கப்பட்டோர், கால், கை இழந்தோர். உயிர் இழந்தோர் ஆகியோர் குடும்பங்களைக் காப்பாற்றத் தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

### தமிழ் வீரர் குடும்பத்திற்குத் தமிழக அரசின் உதவிகள்

தமிழ்நாட்டிலிருந்து களம் சென்று போரில் இறந்தோர் குடும்பங்களுக்கும் அங்கஹீனமாகிப் பணியாற்றிடத் தகுதியிழந்தவர் குடும்பங்களுக்கும், ஐயாயிர ரூபாயும், மூன்று ஏக்கரா புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கரா நன்செய்யும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும். அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும் உடைகளுக்கும் உதவி அளிக்கப்படும்

யுத்த நேரத்தில் ரத்த தானம் இன்றியமையாத அறச் செயல்! அதனைச் செய்திட அனைவரும் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள வேண்டும்.

செரு முனையில் நாடு !

சிங்க முழக்கம் செய்திடும் ஆற்றல் மறவர் போரில் !

எதிரிகளைத் தூளாக்கிட எக்காள முழக்கம் எங்கணும் கேட்குது !

கடைசி யுத்தமெனக் கர்ஜிக்கிறார் யாகியாகான் !

தன் முடிவைத் தானே தெரிந்துகொண்டும் போருக்குப் வந்திருக்கிறார் என்று புரிகிறது.

உண்மை உணர்ந்த நாடுகள் நம் பக்கம். நியாயமுணர்ந்த தேசங்கள் நம் பக்கம்.

உண்மை உணர்ந்தும் நம்மை அலட்சியப்படுத்துகிற நாடுகள் விரைவில் திருந்துகிற அளவுக்கு இந்தப் போரில் பாடங்கற்றுக் கொடுப்போம்.



அதற்கு நம்முடைய ஒற்றுமையைப் பலப்படுத்துவோம். கட்சி, மத, சமய, சாதி வேறு பாடுகளை மறப்போம்.

வீரச் செயல் புரிவோம்! தீரத்தை நிலைநாட்டுவோம்.

வீர விருதுகள் பெறுவோருக்குத் தமிழக அரசு பொற்கிழி அளிக்கிறது. பரம வீர சக்கர விருது பெற்றவர்க்குப் பத்தாயிர ரூபாய் என்று இதுவரையில் இருப்பது பதினைந்தாயிரமாக இனிமேல் உயர்த்தி வழங்கப்படும்.

மகா வீர சக்கர விருது பெற்றவர்க்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று இதுவரையில் இருப்பது இனிமேல் பத்தாயிரமாக உயர்த்தித் தரப்படும்.

வீர சக்கர விருது மூவாயிரம் என்று இருப்பது ஐயாயிரம் ரூபாயாக இனிமேல் உயர்த்தித் தரப்படும். சேனை விருதுக்கு முதல் தடவையாக நமது தமிழக அரசின் சார்பில் மூவாயிர ரூபாய் வழங்கப்பட இருக்கிறது.

வீரர்களுக்கு அரசு காட்டும் ஊக்கத்தைப் போலவே தமிழகப் பெருமக்களும் ஊக்கம் காட்டிட வேண்டும்.

பொதுச் சேவை புரிவோர் இந்த நற்பணியில் இன்றே இறங்கிவிட வேண்டும். எதிரியை நோக்கி இந்தியாவின் 110 கோடிக்கு மேற்பட்ட கரங்கள், வீர முழக்கத்தோடு உயர்ந்துள்ள உணர்ச்சி மிகு காட்சியை அனைத்துலகும் கண்டு வியக்கும் வண்ணம் போரில் ஈடுபடுவோம்.

வெற்றி நமதே ! எதிரி வீழ்வது உறுதி !

வணக்கம்.

---

* 7—12—71ல் சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப் பெற்றது.

## வாழிய வங்கம்



தமிழக முதல்வர் அவர்கள், வங்கதேச வெற்றி குறித்த பாராட்டுத் தீர்மானத்தை 17—12– 1971-ல் தமிழகச் சட்டப் பேரவையில் முன்மொழிந்து ஆற்றிய முன்னுரையும் முடிப்புரையும் இங்கே தொகுத்துத் தரப்பெறுகின்றன.

### தீர்மானம்

"வங்காள தேசத்தின் உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்து, சுதந்திர வங்காள தேசம் உதயமானதற்கு இந்தப் பேரவை தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

வங்காள தேசத்தின் உரிமைப் போருக்கு மனிதாபிமான உணர்வுடன் ஆதரவு தந்து, பாகிஸ்தானின் போர்வெறிக்குத் தக்கபாடம் கற்பித்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு இந்தப் பேரவை பாராட்டுகளைக் குவிக்கிறது.

இன்னுயிர் தந்தும், இழப்புக்களை ஏற்றும் இந்தத் தியாகப் போரில் ஈடுபட்ட இந்திய வீரர்கள்—வங்க தேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் இந்தப் பேரவை தனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறது.

மலர்ந்துள்ள புதிய வங்காள தேசத்தின் விடுதலை வீரர் முஜிபுர் ரகிமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு அனைத்து நாடுகளும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்த விடுதலைப் போரில் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தியாவுடன் ஒத்துழைக்காததையும் இந்தியாவுக்கு விரோதமாக—பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருவதையும் கண்டிப்பதோடு, இந்தியாவுக்குத் துணை நின்ற சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்கு இந்தப் பேரவை இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும் செய்கிறது.''

## பாகிஸ்தானின் சரணகதிப் படலம்

பன்னிரண்டு நாட்களாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மாபெரும் வெற்றியை—மகத்தான வெற்றியை இந்தியா பெற்றுத் தந்திருக்கிறது.

பாகிஸ்தானின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டுவந்த கிழக்கு வங்க மக்கள் ஜனநாயக முறையிலே எழுப்பிய தங்கள் உரிமைக் குரல், பாகிஸ்தானத்தினுடைய சர்வாதிகாரிகளால் அலட்சியப்படுத்தப்பட்ட காரணத்தால், அந்த உரிமைக் குரல் விடுதலைக் குரலாக மாறி, பாகிஸ்தானத்தின் சர்வாதிகாரிகளுடைய அட்டூழியங்கள் அளவு மீறி, அந்தப் பகுதி மக்கள் பெரும் கொடுமைக்கு ஆளாகி, அவர்கள் ஆர்த்தெழுந்து விடுதலை முரசை வேகமாகத் தட்டி, மனிதாபிமான உணர்ச்சியுடன் அரசியல் தீர்வு காணவேண்டிய ஒரு பிரச்சினையைப் பாகிஸ்தானத்தினுடைய அதிபர் யாகியாகான் புறக்கணித்துவிட்ட காரணத்தினால் அனைத்துலக நாடுகளுக்கும் அந்தப் பேருண்மையை எடுத்துச் சொல்ல, அனைத்துலக நாடுகளில் நம்பக்கம் இருக்கின்ற நாடுகளின் பேராதரவினை எல்லாம் ஒருங்கே பெற்று, இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தப் போராட்டத்தில் பெரிய வெற்றியினை ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

பத்து நாளில் யுத்தம் என்று யாகியாகான் முதலிலே முழங்கினார். இதுவே கடைசி யுத்தம் என்று பின்பு சொன்னார். இப்போது ஐ.நா. மன்றத்திற்குச் சென்றிருக்கிற பாகிஸ்தானத்தினுடைய—நியமிக்கப்பட்ட உதவிப் பிரதமர் பூட்டோ அவர்கள் ஆயிரம் ஆண்டுக் காலம் இந்த யுத்தம் நடைபெறும் என்று ஆரூடம் கணித்திருக்கிறார். ஆனால் அவர்களுடைய பேச்சுக்கள் கேலிக்குரியதாக, கிண்டலுக்குரியதாக ஆக்கப்பட்டன என்பதற்கு அடையாளமாகத்தான் இன்று வங்காள தேசம் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டு, அதிலே மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறது. அந்த வெற்றிக்குத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தந்த பேராதரவும், இந்திய இராணுவ வீரர்கள் காட்டிய ஆர்வமும், தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் போர்களிலே அவர்கள் புரிந்த சாதனைகளும், முப்படைத் தளபதிகளும், அதிலே அணிவகுத்து நின்ற வீரர்களும் நடத்திய திறமைமிக்க போராட்டமுமே காரணமாகும்.

இறுதி நேரத்திலேகூடப் போராடி, வங்கதேசத்தினுடைய தலைநகரம் டாக்காவைப் பிடித்துவிடலாம் என்ற உறுதி இருந்தாலும் மனிதாபிமான உணர்ச்சியோடு, எதிரியினுடைய வீரர்கள் அனைவருக்கும், தலைநகரில் இருக்கிற மக்கள் அனைவருக்கும் தொல்லைகள் ஏற்படுத்த விரும்பாத இந்தியா, அவர்

களுக்குக் காலக்கெடு அளித்து, இன்னும் சில மணி நேரம் வேண்டும் நாங்கள் யோசிப்பதற்கு—சிந்திப்பதற்கு என்று கேட்டதற்கு அதையும் வழங்கி, அதற்குப்பின் பாகிஸ்தானத்தினுடைய தளபதியின் சரணுகதிப் படலத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

### வானளாவிப் பறக்கிறது வங்க தேசக் கொடி

இன்றைக்கு வங்கதேசம் விடுதலை பெற்று விட்டது; சுதந்திர நாடாக ஆகிவிட்டது. அந்த நாட்டினுடைய கொடி பட்டொளி வீசி, முகிலைத் தொடப் பறக்க இருக்கிறது—பறக்கிறது.

### உரிமைக் குரல் கொடுத்த மாவீரனை விடுதலை செய்க!

இதே நேரத்தில் இந்த மண்ணினுடைய உரிமைக்குக் குரல் கொடுத்த மாவீரன், இந்த மண்ணினுடைய விடுதலைக்கு முழக்கமிட்ட கர்ம வீரன் முஜிபுர் ரகிமான் மேற்குப் பாகிஸ்தான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதை, அந்த மாவீரனுடைய விடுதலைக்கு உலக நாடுகளில் இருக்கின்ற எல்லா மக்களும்—நான் நாடுகளைச் சொல்லவில்லை—எல்லா மக்களும் மனிதாபிமான உணர்ச்சியோடு அவரை விடுதலை செய்ய விருப்பம் கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம். ஆகவே, நாம் விடுதலை பெற்றிருக்கிற வங்கதேச விடுதலை வீரர் முஜிபுர் ரகிமானை உடனடியாக விடுதலை செய்வதற்கு எல்லா நாடுகளும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை இந்தப் பேரவையிலே நிறைவேற்றியிருக்கிருேம்.

நான் ஏற்கெனவே வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவுடன் ஒரு கூட்டத்தில், இந்தியாவைச் சில நாடுகள் புறக்கணிக்கின்றன—அலட்சியப்படுத்துகின்றன என்ருல், நாம் பெற இருக்கின்ற வெற்றிகள் அந்த அலட்சிய மனப்பான்மையைப் போக்கிவிடும்; நாம் பெற்றுக் கொடுக்கிற அந்த வெற்றி, மேலும் அகில உலகில் நமக்கு ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் தரும் என்று தெரிவித்ததைப்போல இன்றைக்கு அந்த வெற்றியை நாம் பெற்றிருக்கிருேம்.

வெற்றிக்கு முழுமுதல் காரணமாக இருந்த நம்முடைய படைவீரர்கள் அனைவருக்கும், வங்கதேச விடுதலை வீரர்கள் அனைவருக்கும் தலைவணங்கி வாழ்த்துத் தெரிவித்துக்கொள்வதோடு இந்த வெற்றியின் தலைவி—இந்திய மண்ணின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் நான் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பல வெற்றிகள் நமக்கு நிச்சயமாகக் குவியும். ஆனால் நமக்கு மண்ணாசை கிடையாது என்பதைத் தெரிவிப்பதற்குஎடுத்துக்காட்டாக மேற்குப் பகுதியில் போர் நிறுத்தத்திற்கு இந்தியா தயாராக இருக்கிறதென்று அறிவித்திருக்கிறோம்.

## மக்களின் கரங்கள் யாவும் துப்பாக்கிகளாக மாறும்

போர் நிறுத்தம் செய்யப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் அதை பாகிஸ்தான் காதில் போட்டுக் கொள்ளாமல், தன் முடிவை விடாமல், வேறு பல நாடுகளின்—அமெரிக்கா, சீனா போன்ற ஆதிபத்திய நாடுகளின் தூண்டுதலினால் தாக்குவதானால், இந்திய மக்களின் அத்தனை கரங்களும் துப்பாக்கிகளாக மாறி வரும்; எதிரிகளை வீழ்த்தும் என்ற உறுதியினை இந்த அவையிலே நாம் எடுத்துக்கொள்கிறோம் என்று கூறி இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.




## மரத்தடியில் பிறந்த கொடி

முன் மொழியப்பட்ட தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் வரவேற்றுப் பாராட்டி இந்த மன்றமே ஒருமுகமாக நிறைவேற்றுகிற கட்டத்தில் நான் மேலும் சில வார்த்தைகளைக் கூறுவது பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

சுதந்திரக் கொடியை வங்காள தேசத்து மக்கள் ஏற்றிய நேரத்தில் அதை ஏற்றி வைத்திருப்பதற்குக் கூட அவர்களுக்கு ஓர் இடம் இல்லை. வங்க தேசத்தில் எங்கேயோ ஒரு மூலையில் ஒரு மரத்தடியில் தங்களுடைய அரசை அவர்கள் உருவாக்கினார்கள்.

இவர் ஜனாதிபதி, இவர் பிரதமர், இவர் ராணுவத் தளபதி என்றெல்லாம் அவர்கள் பிரகடனம் செய்தபோது உலக நாடுகள் கேலிக் கண்களோடு அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்ததையும் ‘ இது எங்கே நடக்கப் போகிறது? புது நாடா? இது உருவாகுமா ?’ என்றெல்லாம் கேட்ட கேள்விகளையும் யாரும் மறந்திருக்க முடியாது.



இன்னமும் பத்திரிகைகளில் வந்த அந்த புகைப்படம் நம் நெஞ்சிலே பசுமையாகப் பதிந் திருக்கிறது. ஒரு மரத்தடியில் ஒரு சாதாரணத்துணி போட்டுக் கூட மூடப்படாத ஒரு மேஜை யும், பழுதுபார்க்கப்பட வேண்டிய சில நாற்காலிகளும் அதிலே நான்கைந்து வங்க தேசத்தினுடைய-புதிதாக அறி விக்கப்பட்ட நிருவாகிகளும், அவர்களுக்கு எதிரே மிகச் சொற்பமான ஒரு கூட்டமும் அதனைச் சுற்றிச் சில மரம் செடிகளும், இப்படிப்பட்ட ஒரு புகைப்படம் எல்லா ஏடுகளிலும் வெளியாகியிருந்தது.

ஆனால், இன்றைக்கு அந்தப் படம் மாறி அவர்கள் கிட்டத் தட்ட ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்களின் தளநாயகர் களாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கேயோ ஓர் இடத்தில்—அவர்களாகச் சூட்டிக் கொண்ட முஜிபுர் நகர் என்கிற இடத்தில் பறக்கவிடப்பட்ட அந்தக் கொடி இன்றைக்கு வங்க தேசத்தினுடைய தலைநகர மான—இந்திரா காந்தி அவர்கள், அறிவித்ததைப் போல் சுதந்திர நாட்டின் சுதந்திரத் தலை நகரமான டாக்கா நகரத் தில் பறக்கவிடப்பட்டிருக்கிறது.

## உரிமை விரும்பிகளை என்றும் ஒடுக்கி வைக்க முடியாது

இது, புறக்கணிக்கப்படுகிறவர்களும், அலட்சியப்படுத் தப்படுகிறவர்களும், உரிமையின்றி நசுக்கப்படுகிறவர்களும், விடுதலை விரும்பிகளும் என்றைக்காவது ஒரு வெற்றியை நிச்சயமாகப் பெற்றே தீர்வார்கள் என்ற நம்பிக்கையை அகில உலகிற்கும் ஜனநாயக ரீதியில் அறிவித்துக் கொண் டிருக்கிற சாட்சியமாகும்.

முஜிபுர் நகர் என்று விளையாட்டாகச் சொல்லப்பட்ட பெயர், வேடிக்கையாகக் கணிக்கப்பட்ட ஒரு நகரத்தினுடைய பெயர். ஆனால், இன்றைக்கு டாக்கா நகரத்திற்கே அந்தப் பெயரை வைக்கலாமா என்று அவர்கள் எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

'டாக்கா' என்றாலே, டாக் என்ற ஒரு வகை மரங்கள் நிறைந்த இடம் என்றும், அதனால்தான் அந்த நகரத்திற்கு அந்தப் பெயர் வந்தது என்றும் கூறுகிறார்கள்.

அதேபோல், மரங்கள் அடர்ந்த ஓர் இடத்தில் ஒரு புதிய அரசு உருவாகியது. மரங்கள் அடர்ந்து இருப்பதன் காரணத்தால் அந்தப் பெயரைப் பெற்ற ஒரு தலை நகரத்தில் அந்த அரசு நிலை பெறுகிறது. அப்படி நிலைபெறுவதற்கான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலை வீரர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, அவர்கள் பக்கம் இருந்து, மனிதாபிமான உணர்ச்சியோடு ஜனநாயகக் கடமையினைச் செய்து முடித்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களை நாடும், நானிலமும் போற்றத் தவறாது.

## வேறுபாடுகளற்றுப் போர்முனையில் நிற்கிறோம்!

திருமதி அனந்தநாயகி பேசுகையில், பெண்ணின் பெருமையை உலகம் உணர்ந்தது என்றார். கொஞ்சம் தாமதமாக உணர்ந்தாலும் (சிரிப்பு) பெண்ணின் பெருமையை உலகம் உணர்ந்திருக்கிறது.

இந்திரா காந்தி அவர்கள் எடுத்த அந்த முயற்சிகளை அனைத்து உலகத்திலுள்ள சில நாடுகள் ஆரம்பத்தில் அலட்சியப்படுத்தினாலும், அந்த நாடுகளுக்கெல்லாம் பாடம் போதிக்கும் வகையில் இந்திரா காந்தி தன் திறமையையும், ஆற்றலையும், இந்தியாவின் ஒருமித்த சக்தியையும் எடுத்துக் காட்டி, மகத்தான வெற்றியினைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தப் போர் இந்தியாவின் ஒரு பக்கத்திலே நடைபெற்றாலும், அது தமிழ்நாட்டையும் பாதிக்கக் கூடிய போர் என்பதையும் யாரும் மறந்துவிடக் கூடாது.

அன்றைக்கே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் தமிழ்மக்களும், ஆந்திர மாநிலம், கேரள மாநிலம், மைசூர் மாநிலம், குஜராத் மாநிலம் என்ற பாகுபாடு இல்லாமல் இந்தியா ஒன்று என்கிற ஒரே உத்வேகத்தோடு எதிரியை வீழ்த்துவதற்குப் போர்முனையில் நின்று கொண்டு இருக்கிறார்கள்.

## போருக்குப் பின்னும் போர்க்களத்தில் நாம்

தமிழ் நாட்டுக்குப் போர் வராவிட்டாலும் தமிழ்நாடு போர்முனையில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்றைக்குத் தமிழ்நாட்டு வீரர்கள் சிலர், ஏன், பலர் என்றுகூடச் சொல்லலாம். இந்தப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அணிந்திருந்த ராணுவ உடைகள் அவர்களுடைய வீட்டிற்குத் திரும்ப அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த ராணுவ உடைகளைக் கண்ணீரால் நனைத்து, அவைகளைத் தம் அருமருந்தன்ன

செல்வன் நினைவாக, வீட்டுத் தலைவனின் நினைவாகப் பேழையில் வைத்துப் பூட்டி, மலர் கொண்டு பூஜித்துக் கொண்டு இருக்கின்ற வீட்டுத் தாய்மார்கள், நம் அனுசரணைக்கும், ஆதரவுக்கும் உரியவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

போர் வெற்றியைக் கொடுக்கும். ஆனால், போருக்குப்பின் ஏற்படுகின்ற விளைவுகளை நாடு சமாளித்துத் தீர வேண்டும். அப்படிச் சமாளிக்கின்ற ஆற்றலை நாம் அனைவரும் பெற்று இருக்கின்றோம்.

### வீரத்தாய்மார்கள் ஆறுதலும் மகிழ்ச்சியும் பெற

நம்முடைய மன்றத்தில் கட்சித் தலைவர்கள் அனைவரும் எடுத்துக் காட்டியது போல், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அந்தக் கடமை உண்டு; இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு; அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்ததும், மாவட்ட அதிகாரி மூலமாகத் தகவல் அந்த அந்த இடங்களுக்குத் தரப்படுகிறது. அந்த நேரத்தில், அதிகாரிகள் அந்த வீட்டாருக்கு ஆறுதல் கூறுவதற்கு முன்பாக, ஆங்காங்கே மக்கள் பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் சென்றார்கள் என்று சொல்லுகின்ற அளவுக்குச் சில இடங்களில் கூடுமானால் அமைச்சர்களே கூட இல்லங்களுக்குச் சென்றார்கள்—ஆறுதல் சொன்னார்கள் என்று அதிகாரிகளை முந்திக்கொண்டு நாம் நின்றால்தான் 'நம் மகன் இந்த மானப் போர்க்களத்தில் மடிந்து விட்டாலும், அந்த மகனுக்குப் பதிலாக, இதோ, இன்னொரு மகன் இருக்கிறான்' என்று அந்தத் தாய்மார்கள் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைவார்கள். நம் தாய்த்திருநாடு எழுச்சியினைப் பெறமுடியும்.

### வீர மறவர்களைப் போற்றி வணங்குவோம் !

நம்முடைய நாடு புறநானூற்றுப் புகழ் கொண்ட நாடு. புறநானூற்றுத் தாய்மார்கள் வாழ்ந்த நாடு, நம் தமிழ் நாடு. இங்கே வீரத்திற்குப் பஞ்சம் இல்லை. மானத்தை நிலைநாட்ட மறவர்கள் போர்க்களத்தில் தங்கள் இன்னுயிரைப் பலி கொடுப்பது நம் நாட்டைப் பொறுத்த வரையில் புதிதல்ல.

'வெங்கொடுமைச் சாக்காட்டில், விளையாடும் தோள்
எங்கள் வெற்றித் தோள்கள்;

வெங்குருதி தனில்கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சு
எங்கள் மூச்சாம்'

—என்று தமிழ் நாட்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதற்கு ஏற்ப ஆற்றல் மறவர்கள் நிறைந்த நாடு நம் தமிழ் மாநிலம். ஆகவே, அந்தத் தமிழ்ப் பெருமக்கள் இந்தப் போராட்டத்தில் வெற்றியினைத் தேடித் தரத் தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள்; தங்கள் அங்கங்களை அறுத்துக் கொடுத்திருக்கிறார்கள்; கால் கைகளை இழந்து பச்சை ரத்தத்தைப் பரிமாறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீர மறவர்களுக்கு இப்பேரவையின் வணக்கத்தைச் சொல்வதன் மூலம் நாம் நம்முடைய மதிப்பை உயர்த்திக் கொள்கிறோம் என்றால் மிகையாகாது.



அப்படிப்பட்ட வீரர்களுக்கு இப்போதுகூட இந்த அரசு சில விருதுகளையும், அந்த விருதுகளுக்கு ஏற்பப் பண முடிப்புக்களையும் தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. அது போதாது என்றாலும், நம்மால் முடிந்ததைச் செய்கிறோம்; நம்முடைய இதயத்தை அந்தக் குடும்பத்தின் பக்கம் ஒப்படைக்கிறோம்.

### ஆறுதல் வழங்கும் பொறுப்பு அனைவர்க்கும் உரியது

நண்பர் டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள், 'கன்னர்' ஆறுமுகம் அவர்கள் பற்றிய கடிதத்தை இந்த அவையில் குறிப்பிடுவது நல்லது என்று. அது உங்களுடைய உள்ளத்தைத் தொடக் கூடியது.

இப்படிப்பட்ட இல்லங்களிலே ஆறு என ஓடுகின்ற கண்ணீரைத் துடைப்பதற்குப் பயன்படும் என்று இதை அவையில் படிக்கிறேன். அது நீண்ட கடிதம், ஒரு பகுதியை மாத்திரம் படிக்கின்றேன். மேஜர் பால் அவர்கள், ஆபீசர் கமான்டிங், எழுதியுள்ள கடிதம் :

Unfortunately gunner Arumugam got a bullet hit in his head while fighting this action but he carried on his duties until he fell dead, in the service of our motherland. His bravery and courage has become an example and source of

inspiration for the entire unit. Gunner Arumugam was recently married and leaves behind his widow who is understood to be in the family way. We are all concerned about her and are doing our best in all possible ways. However, I shall be very grateful if you could kindly keep a fatherly and protective hand on her and extend all possible assistance to her.

இப்படிப்பட்ட கடிதங்கள், இதுபோன்ற போர்க்காலங்களில் ஏராளமாக வரக்கூடும். ஆறுமுகங்கள் ஆயிரம் ஆயிரம் தோன்றக்கூடும். ஆறுமுகங்களுடைய குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அந்தப் பணியில் நாம் ஈடுபடுவோமேயானால் தான் இந்தியாவில் இருக்கின்ற 55 கோடி மக்களும், தமிழ் நாட்டில் இருக்கின்ற 4 கோடி மக்களும் போர்க்களத்தில் நிற்கின்றோம் என்கிற உணர்ச்சி எதிரிகளுக்கு உருவாகும்.

## பூட்டோவும் வீட்டோவும்

இப்பொழுதும், இந்தியா, நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல், மண்ணாசை பிடித்து அலையவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகப் போர் நிறுத்தம் செய்கிறது என்று அறிவித்திருக்கிறது.

ஒன்றை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

முதலிலே இந்தியாவின் மீது போர் தொடுத்தது பாகிஸ்தான். ஆக, போர் தொடுத்ததில் முந்திக்கொண்டது பாகிஸ்தான். ஆனால் இன்றைக்குப் போர் நிறுத்தம் செய்கிறோம் என்பதில் முந்திக் கொண்டிருப்பது இந்தியா.

இதை மனத்தில் கொண்டு உலக நாடுகளில் சில நாடுகள், தாங்கள் எடுத்த அநியாயமான முடிவுகளிலிருந்து தங்களை மாற்றிக்கொள்ளாவிட்டால், இந்தியா அவர்களுக்குக் கட்டாயம் மேலும் புத்திதரத்தக்க அளவுக்குப் பாடத்தைப் புகட்டும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகம் இல்லை.

இன்றைக்கு அமெரிக்காவின் கையில் 'பூட்டோ' இருக்கலாம்; ஆனால் ரஷ்யாவின் கையில் 'வீட்டோ' இருக்கிறது.

(பலத்த கையொலி)

**நியாயத்திற்குப் பாடுபடும் நாடுகள் நம் பக்கமே !**

இன்றைக்கு ஐ.நா. மன்றங்கள்—நியூயார்க் நகரத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிப்பது என்னவென்றால், நல்ல நாடுகள், நியாயத்திற்குப் பாடுபடும் நாடுகள் நியாயத்தின் பக்கம்ஆதரவு கோரும் நாடுகள் நம்பக்கம்இருக்கின்றன. அந்த நாடுகளுக்கு நாம் மேலும், மேலும், மீண்டும், மீண்டும் இந்தப் பேரவையின் சார்பில், 4 கோடி தமிழ்மக்களின் சார்பில், நம் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளும் இந்த நேரத்தில், இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

(பலத்த ஆரவாரம்)

[ஒருமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது என்று பேரவைத் தலைவர் அறிவித்தார்.]

# தமிழரசு

## இலவச இணைப்பு

தமிழ் நாடு அரசினர் அச்சகம், சென்னை